1981 ஜனவரி 30]

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, விளாத்திகுளம் மிகவும் பிற்பட்ட பகுதி. ஏற்கனவே பேட்டையில் உள்ள கூட்டுறவு நூற்பலையின் கிளை ஒன்றை எட்டயபுரத்தில் ஆரம்பிக்க ஏற்பாடுகள் நடத்தப்பட்டு இருக்கிறது என்று அறிகிறேன். ஆகவே, அந்தக் கிளையை எட்டயபுரத்தில் பாரதி நூற்றாண்டான இந்த ஆண்டில் ஏற்படுத்தி, அதற்கு பாரதி கூட்டுறவு நூற்பாலை என்று பெயர் வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் ஏற்கனவே இரண்டு கூட்டுறவு நூற்பாலைகள் இருக்கின்றன. பேட்டையில் இயங்குகின்ற தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலையின் கிளை ஒன்றை திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஏதாவது ஒரு பிற்பட்ட பகுதியில் ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு பல இடங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. அது 12,000 கதிர்களுடன் இயங்கும் நிறுவனமாக விரைவில் ஆரம்பிக்கப்படும்.

திருச்சியில் தொழில் நுட்ப வேலை வாய்ப்பு அலுவலகம்.

*வினா எண் 120—திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கிழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழில் நுட்பத் தகுதி படைத்தவர்களுக்காகத் தனியாக ஒரு வேலைவாய்ப்பு நிலையம் (எம்ப்ளாயிமெண்ட் எக்சேஞ்) திருச்சியில் தொடங்க அரசிடம் திட்டம் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அந்த அலுவலகம் தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) திருச்சிராப்பள்ளியில் தொழில் நுட்பத் தகுதி படைத்தவர்களுக்காகத் தனியாக ஒரு வேலைவாய்ப்பு நிலையம் அண்மையில் நிறுவப்பட்டுள்ளது.

(ஆ) இந்நிலையம் 1–11–80 முதல் தொடங்கப்பெற்று நடைபெற்று வருகிறது.

திரு. ஜே. எஸ். இராசு: பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியில் தொடங்கியிருப்பது போல், தொழில் நுட்பத் தகுதி படைத்தவர்களுக்கு என்று தனியாக வேலைவாய்ப்பு நிலையங்கள் எந்தெந்த மாவட்டங்களில் இருக்கின்றன? அவ்வாறு இல்லாத மாவட்டங்களிலே தொடங்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் 1974ஆம் ஆண்டு முதல் தொழில் நுட்பக்கல்வித் தகுதி பெற்றவர்களுக்காக சென்னை நந்தனத்தில் ஒரு வேலைவாய்ப்பு நிறுவனம் இயங்கி வந்தது. நான் இப்போது குறிப்பிட்டுச் சொன்னதுபோல். இப்போது திருச்சியில் ஆரம்பிக்கப் பட்டுள்ள வேலைவாய்ப்பு நிலையம் தமிழகத்தில் இரண்டாவதாகும். மற்ற இடங்களில் அந்தந்த மாவட்டங்களிலே உள்ள மத்திய மாநில அரசுகளைச் சார்ந்த பெரிய தொழில் நிறுவனங்கள் இருப்பதைப் பொறுத்தும், இதர நடுத்தர தொழில் பேட்டைகள் இருப்பதைப் பொறுத்தும் அந்தந்த மாவட்டங்களில் ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. ஜே. எஸ். இராசு: தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் இருக்கின்ற வேலைவாய்ப்பு நிலையங்களிலே மதுரை மாவட்டத்தில் இருக்கிற வேலைவாய்ப்பு நிறுவனத்தில் அதிகமான அளவிற்கு 'வொர்க்லோட்' இருப்பதால், அதிகமானபேர் தொழில் நுட்பக் கல்வி பயின்றவர்கள் பதிவு செய்து இருப்பதால், திருச்சியில் இருப்பதைப் போல், மதுரையிலும் ஒரு தொழில் நுட்ப வேலை வாய்ப்பு நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கருத்தை அரசு பரிசீலனை செய்யும்.

தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கிப் பணியாளர்கள்

*வினா எண் 120— அ. திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு கூட்டுறவு, சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கிப் பணியாளர்களுக்கு கடந்த ஏழு ஆண்டுக் காலமாக எந்தவிதமான அகவிலைப் படி உயர்வும், ஊதிய உயர்வும் அளிக்கப்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்காக அரசு என்ன நடவடிக்கை எடுத்து உள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) மாநில நிலவள வங்கியால் கொடுக்கப்பட்ட நீண்டகாலக் கடன்கள் சில ஆண்டுகளாக பெருமளவில் வசூலாகாமல் இருப்பதால் வங்கியின் நிதிநிலை மிகவும் நெருக்கடியில் உள்ளது. மாநில நிலவள வங்கி தனித்து இயங்கும் உரிமை உடையதால் அவ்வங்கியின் நிதிநிலை சீரானதும் பணியாளர்களின் ஊதிய உயர்வு அகவிலைப்படி பற்றிய கோரிக்கைகளை உயர்வு அவ்வங்கியே ஆவணசெய்யும்.